செ.வெ.எண்-56 நாள்-28.08.2021

# அரியலூர் உழவர் சந்தையின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரியலூர் உழவர் சந்தையின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமணசரஸ்வதி இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

**இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய வட்டாரங்களில் கடந்த 2000-ஆம் ஆண்டில் உழவர் சந்தை தொடங்கப்பட்டு நன்கு இயங்கி வந்த நிலையில், தற்போது உழவர் சந்தையின் செயல்பாடுகளை மேலும் செம்மைப்படுத்தும் வகையிலும், விவசாயிகளின் காய்கறிகள் மற்றும் பழங்கள் அழுகி வீணாவதை தடுத்திடவும், நுகர்வோர்களுக்கு தரமான காய்கறிகள் நியாயமான விலையில் கிடைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளைப்பொருட்களை உழவர் சந்தையில் வைத்து வியாபாரம் செய்து பயன்பெறும் வகையில் உழவர் சந்தைக்கு வரும் விவசாயிகளுக்கு இலவசமாக எடைபோடும் தராசு, வாடகை இல்லாத கடை, இலவச குடிநீர், இலவச மின்சாரம் ஆகியவை ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளது. எனவே நுகர்வோர்கள் வெளி சந்தையை விட விலைக்குறைவில் நியாயமான விலையில் மிகவும் தரமான காய்கறிகள் வாங்கி பயன்பெறலாம். விளைப்பொருட்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றினை பதப்படுத்தி மதிப்புகூட்டப்பட்ட பொருட்களை வைத்து விற்க கடை ஒதுக்கீடு செய்து தரப்படும். உழவர் சந்தையில் சிற்றுண்டி மற்றும் தேனீர் கிடைக்க சிற்றுண்டி உணவகம் அமைத்து கொடுக்கப்படும்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தாங்கள் விளைவித்த பொருட்கள், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை வைத்து விற்பனை செய்ய தனிக்கடை ஏற்பாடு செய்து தரப்படும். அதேபோல் சுயஉதவிக்குழுக்களுக்கு ஆங்கில காய்கறிகள் மட்டும் வைத்து விற்பனை செய்ய மிக குறைந்த மாத வாடகைகையுடன் கடை ஒதுக்கீடு செய்யப்படும். விருப்பமுள்ள விவசாயிகள் தங்களின் நில ஆவணங்களுடன் அடையாள அட்டை பெற்று உழவர் சந்தை மூலம் பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) சிங்காரம், துணை வேளாண்மை அலுவலர் பிச்சை, உதவி வேளாண்மை அலுவலர்கள் சதீஸ்குமார், ஷீலாகுமாரி ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**